வேட்டைக்காரன்புதூரில் 16 ஆயிரம் ஏக்கர்; பொள்ளாச்சியில் 22 ஆயிரம் ஏக்கர்; feeder கெனாலில் 13 ஆயிரம் ஏக்கர்; ஆக, இப்படி இவர்களுக்குத் தண்ணீர் விடுகின்ற அளவிற்குத் தண்ணீர் இல்லை. ஆழியாறில் என்ன நிலைமை என்று கேட்டால், 3,864 மில்லியன் கன அடித் தண்ணீர் இருக்க வேண்டிய இடத்தில், 1,100 கன அடித் தண்ணீர்தான் இருக்கிறது. இதிலேயே, P.A.P.–யில் third reach–க்கு இப்போது தண்ணீர் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். மடக்கடவில் கேரளாவிற்குத் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். அதிலும் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். மீதியிருப்பதை எப்படியாவது சுரண்டி, தண்ணீர் கொடுக்க முடியுமா என்று கேட்டால், மிகவும் நெருக்கடியான நிலையில்தான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பிறகு, அதிகாரிகளோடு நான் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். அவர்கள், third reach–நின்ற பிறகாவது ஏதாவது முடியுமா என்று பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இருக்கின்ற தண்ணீரில் ஓரளவு மீதமானாலும், அதைக் கொடுப்பதற்கு இந்த அரசு இயன்ற அளவிற்கு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்குத் திருத்துறைப்பூண்டியில் நினைவுச் சின்னம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் அடிமைப்பட்டுக் கிடந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்று திரட்டி, அவர்களுக்குச் சங்கம் வைத்துப் போராடுவதற்குத் தலைமை தாங்கியவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தினுடைய தளகர்த்தர்களிலே ஒருவராக இருந்து போராடிய ஒப்பற்ற தலைவர் திரு. பி. சீனிவாச ராவ் அவர்கள். அவர்களுடைய நூற்றாண்டு விழா இன்றையதினம். இந்தப் பேரவையிலே ஏற்கெனவே பேசப்பட்டு, திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற வகையிலே ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் விடப்பட்டிருக்கிறது. அது திருத்துறைப்பூண்டியிலே அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அவருடைய

2007 ஏப்ரல் 10] [திரு. வை. சிவபுண்ணியம்]

பிறந்தநாள் என்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனத்தைச் செலுத்தி, திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்குத் திருத்துறைப்பூண்டியிலே நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதற்கான அறிவிப்பினை வெளியிட வேண்டும் என்று அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல், மறைந்த தோழர் சீனிவாச ராவ் அவர்களுடைய நூற்றாண்டு நிறைவு நாள் இன்று. அவரை நினைத்து, அவர் எந்த உழவர் பெருங்குடி மக்களுக்குப் பாடுபட்டாரோ, அவர்களுக்கு நாமும் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டிய நாள் என்பதை நானும் உணர்கின்றேன். ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்ததை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவூட்டி இருக்கின்றார்கள். எடுத்துச் சொன்னதைத் தொடுத்து, தொடர்ந்து அந்தப் பணியினை முடிப்போம் என்ற உறுதியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சீனிவாச ராவ் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உழவர் பெருமக்களுக்காகப் பல தியாகங்களைச் செய்தவர். தஞ்சை மாவட்டத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் சாட்டையடியும், சவுக்கடியும் பட்டபோது, ரத்தவிளாராக அவர்களெல்லாம் துடித்தபோது, அவர்களை அரவணைத்து, அவர்களுக்காக உழைத்தவர். தஞ்சை மாவட்டம் என்றால், ஒரு காலத்திலே பெரும் பண்ணையார்கள் கோலோச்சிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள், உழைக்கின்ற பெருங்குடி மக்கள், அவர்கள் உயர்வதற்காகப் பாடுபட்டவர் திரு. சீனிவாச ராவ் அவர்கள். அவருடைய நினைவைப் போற்றுகின்ற இந்த நாளில் நம்முடைய நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நான் இந்த அவையிலே அளித்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவேன். மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு, அவர்மூலமாக திரு. சீனிவாச ராவ் அவர்களுக்கு நினைவுச் சின்னத்தை நிறுவுவதற்கு ஏற்ற ஆயத்தங்களைச் செய்யுமாறு இன்றைக்கே கேட்டுக்கொள்வேன் என்பதை நான் அவருக்கு உறுதிபடக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி. (குறுக்கீடு) திரு. அமரமூர்த்தி, உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், திரு. பி. சீனிவாச ராவ் அவர்களைப் பற்றி நேரடியாகவே அறிந்தவர்கள். எங்களது ஒப்பற்ற தலைவர் திரு. ஜீவானந்தம் அவர்களும், திரு. சீனிவாச ராவ் அவர்களும் இந்த மாநிலத்திலே பல்வேறு இயக்கங்களைக் கண்டவர்கள். அவர்களோடு நேரடியாகத் தொடர்புகொண்டு, அந்த அனுபவங்களை எல்லாம் இங்கே அவையிலே, நாங்கள் சொல்லாத செய்திகளைக்கூட சிறப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதற்கான முயற்சி இன்றே மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்கின்ற தத்துவத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், செங்கொடி இயக்கத்தினுடைய மகத்தான தலைவராக விளங்கிய பெருமதிப்பிற்குரிய சீனிவாச ராவ் அவர்களுக்கு, ஏற்கெனவே அறிவித்துள்ள அடிப்படையிலே, அங்கே ஒரு நினைவகம் உருவாக்கப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தமைக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எங்கள் கழகக் கொடியில் செங்கொடியும் இணைந்திருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)